**தலைப்பு 293 – இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று, என்பன இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 293 – இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல்

அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 16 ஆந் திகதி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக இறப்பர் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களித்தன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் | 1 | செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள குறைபாடுகள் | 2.1.1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 2 | எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியடைதல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை. | 2.1.2(அ) |
| | | 3 | எதிர்பார்க்கப்பட்ட நலன்களை (outcome) பெற்றுக்கொள்ளாமை | 2.1.2(ஆ) |
| | | 4. | தகவல் முகாமைத்துவ முறைமையை அபிவிருத்தி செய்வதில் தாமதம் | 2.1.2(இ) |
| 128(1)(ஈ) | பெறுனவனவுகள், கொடுப்பனவுகள், வழங்கல்கள் என்பவற்றிற்காக போதியளவு உள்ளக சோதனை முறைமை பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதாகவும் | 1. | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் | 2.6 |
| | | 2. | பொது வைப்புக் கணக்கு | 2.7 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வு செய்யும் போது அவ்வாறு தீர்வு செய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்கி உள்ளன எனவும், | 1. | சொத்துக்கள் முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகள் | 2.2(அ) |
| | | 2. | பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் | 2.2(ஆ) |
| | | 3. | பொறுப்பேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல் | 2.2(இ) |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறைசேரியால் வேண்டப்பட்ட தகவல்கள், கூற்றுக்கள், அறிக்கைகள், என்பவற்றை சரியாக உரிய காலத்தில் சமர்ப்பித்தல் | 1. செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்படாமை<br>2. வருடாந்த செயலாற்றல் அறிக்கையை தாமதித்து சமர்ப்பித்தல். | 2.1.1<br>2.1.3 |
| 128(1)(ஏ) | நிலுவையாகக் காணப்பட்ட கட்டணங்கள் முதலியவற்றை அறவீடு செய்வதற்கு விசேட ஒழுங்கு விதிகளைப் பயன்படுத்துவதற்கு மற்றும் அந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணம் தொடர்பாக அவற்றினை அறவீடு செய்வதனைத் துரிதப்படுத்துவதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சிகள் தொடர்பாக ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது ஏனைய தரப்பினர்களால் பணிக்கப்பட்டவாறு தமக்கு அறிக்கையிடுதல் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளில் நிலுவையாக உள்ள கடன் மீதிகளை அறவீடு செய்தல் | 2.6(ஆ) |
| 128(1)(ஏ) | அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்த்த சிக்கனம், வினைத்திறன், ஒழுங்குமுறை, நேர்மை ஆகிய விடயங்கள் தொடர்பாக முறையான கவனத்துடன் தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது | 1. எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை<br>2. எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்ளாமை<br>3. தகவல் முகாமைத்துவ முறைமையை அபிவிருத்தி செய்வதில் தாமதம்<br>4. முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்<br>5. முகாமைத்துவ பலவீனங்கள் | 2.1.2(அ)<br>2.1.2(ஆ)<br>2.2(இ)<br>2.3<br>2.4 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(க) | கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது பொறுப்புக்களுக்கு உட்படுகின்ற செலவுத் தலைப்பின் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்திற்காக நிதி ஆண்டு இறுதியில் ஒதுக்கீட்டுக் கணக்கு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது என்பது | ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் | 2.5 |

## 2. பொருன்மையான மற்றும் முக்கயத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 திட்டமிடல்

திணைக்களத்தால் நிறைவேற்றப்பட வேண்டிய பிரதான செயற்பாடுகளிலிருந்து எதிர்பார்த்த பெறுபெறுகளைப் பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் சம்பந்தமாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட பயிர்கள் மற்றும் முன்னைய ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பயிர்களுக்காக செலுத்த வேண்டிய நிவாரணங்களை தனித்தனியாக இனங்கண்டு நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் (Activity Plan) அமுல்ப்படுத்தும் கால அட்டவணை (Time Line) அந் நடவடிக்கைகளின் எதிர்பார்த்த வெளியீடு / விளைவு (outPut, outcome) என்பன மதிப்பீடு செய்யப்பட்டு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.1.2 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை.

செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்ட இரண்டு பிரதான நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக 10 நானாவித நிகழ்ச்சித்திட்டங்கள் இனங்காணப்பட்டு அதற்காக ரூபா 900 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டம் (output) அடைந்து கொள்ளப்படாத பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டில் சிறிய இறப்பர் தோட்ட உரிமையாளர்களின் மற்றும் பெருந்தோட்டக் கம்பனிகளின் முறையே 2700 ஹெக்டயர் மற்றும் 1500 ஹெக்டயர் காணிகளில் இறப்பர் மீள் பயிர்ச் செய்கை செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் அவற்றில் முறையே 787 ஹெக்டயர் மற்றும் 59.52 ஹெக்டயர் காணிகளில் மாத்திரம் மீள் பயிர்ச் செய்கை செய்யப்பட்டிருந்தன. அதற்கிணங்க, நிறைவேற்றப்படாத அளவு திட்டமிடப்பட்ட அளவில் முறையே 70 சதவீதம் மற்றும் 96 சதவீதமாக இருந்தது.

(ii) மீளாய்வாண்டில் சம்பிராதாய மற்றும் சம்பிரதாயமற்ற பிரதேசங்களில் புதிய 2760 ஹெக்டயர் காணிகளில் இறப்பரும் 460 ஹெக்டயர்களில் இடைப்பயிர்களும் பயிரிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் முறையே 327.8 ஹெக்டயர் காணிகளில் மற்றும் 240.71 ஹெக்டயர் காணிகளில் மாத்திரம் பயிரிடப்பட்டிருந்தன. அதற்கிணங்க நிறைவேற்றப்படாத அளவு திட்டமிடப்பட்ட அளவில் 88 சதவீதம் மற்றும் 47 சதவீதமாக இருந்தன.

(iii) மீளாய்வாண்டில் சிறிய தோட்ட உரிமையாளர்கள் மற்றும் தோட்ட கம்பனிகளின் 3,750 ஹெக்டயர் காணிகளில் மழைக்காப்பை ஈடுபடுத்துவதற்காக நிவாரணங்களைச் செலுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் 1,235.41 ஹெக்டயர் காணிகளில் மாத்திரம் மழைக்காப்பு ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மழைக்காப்பு ஈடுபடுத்தப்படாத அளவு திட்டமிடப்பட்ட அளவில் 67 சதவீதமாக இருந்ததுடன் விழிப்புனர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் மழை உள்ளடக்கத்தில் ஈடுபடுவதனை ஊக்குவிப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 1,650,000 இறப்பர் நாற்றுக்களை உற்பத்தி செய்து பகிர்ந்தளிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1,045,956 இறப்பர் நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டு அவற்றில் 664,651 நாற்றுக்களாகிய இலக்கிடப்பட்ட அளவில் 40 சதவீதம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) எதிர்பார்த்த பெறுபேறுகள் (outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

---

ரூபா 185,842,375 கிரயம் செலவு செய்து 8 நாற்று மேடைகள் பேணப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் நாற்றுக்களை விற்பனை செய்யும் வருமானம் ரூபா 56,637,720 ஆக இருந்தது. அதற்கிணங்க ஒரு இறப்பர் நாற்றின் உற்பத்திக் கிரயத்தை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தகவல் முகாமைத்துவ முறைமையை அபிவிருத்தி செய்வதில் தாமதம்

இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் ஒரு தனியார் கம்பனியுடன் 2016 மார்ச் 02 ஆந் திகதி – முகாமைத்துவ முறைமையை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 25.43 மில்லியன் தொகைக்கு உடன்படிக்கை செய்திருந்தது. அந்த உடன்படிக்கையின் பிரகாரம் உரிய நடவடிக்கை 2016 திசெம்பர் மாதம் முடிவடைய வேண்டிய போதிலும் 2018 ஆகஸ்ட் மாதம் வரை உடன்படிக்கை செய்த பணத்தில் ரூபா 13.99 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தும் முறைமையின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.1.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் அந்த அறிக்கை 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரை பராளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை.

**2.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

**(அ) சொத்துக்களை ஏடுகளில் பதிவு செய்தல்**

2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் 2017 நவம்பர் 30 ஆந் திகதியளவில் கொம்ட்ரோலர் ஜெனரால் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் அத்தகவல்களில் வாகனம் தொடர்பான விபரம் மாத்திரம் அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய நிலையான சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரை அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற 11 உத்தியோகபூர்வ இல்லங்கள் உரிய காலத்தில் திருத்தங்கள் செய்து மேற்பார்வை செய்யப்படாததன் காரணமாக அக்கட்டிடங்கள் அழிவுற்றுக் காணப்பட்டன.

**(இ) பொறுப்பேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கின்ற ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான 24 உத்தியோகபூர்வ இல்லங்களை திணைக்களத்தினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

### (அ) செஸ்வரி அறவீடு செய்தல்

2006 இன் 20 ஆம் இலக்க இறப்பர் மீள்நடுகை நிவாரண நிதிய அதிகாரச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரிக்கான கட்டளைகளின் 2(1)(ஈ) மற்றும் 2(3)(உ) பந்திகளின் பிரகாரம் ஏற்றுமதி செய்வதற்காக அல்லது உள்நாட்டு பயன்பாட்டிற்காக உற்பத்தி செய்யப்படுகின்ற இயற்கை இறப்பர் சார்ந்த உற்பத்திகளுக்குத் தேவையான ஒரு கிலோ கிராம் பதப்படுத்தப்படாத இறப்பருக்கு ரூபா 4 செஸ்வரியானது அந்த பதப்படுத்தப்படாத இறப்பர்களை கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்தில் வழங்குனர்களிடமிருந்து அறவீடு செய்து கைத்தொழிலாளர்களால் திணைக்களத்திற்கு செலுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், பரிசோதனைக்கு உட்படுத்திய இறப்பர் சார்ந்த உற்பத்தி பொருட்களை ஏற்றுமதி செய்கின்ற கைத்தொழிளாளர் மேற்கூறிய கட்டளையின் பிரகாரம் வழங்குனர்களிடமிருந்து இறப்பர்களை கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்தில் அறவிடப்பட்ட செஸ்வரியை திணைக்களத்திற்கு செலுத்தும் போது செஸ்வரி பணத்தில் அக் கைத்தொழிலாளர் ஏற்றுமதி செய்யும் போது ஒரு கிலோ கிராமிற்கு ரூபா 4 வீதம் சுங்கத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்ட செஸ்வரிப் பணம் கழிக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2011 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை அவ்வாறு கழிக்கப்பட்ட செஸ்வரிப் பணம் ரூபா 195,796,741 ஆக இருந்தது.

### (ஆ) கட்டிடங்கள் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல்

திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தை செயற்படுத்துவதற்காக ஒரு கட்டிடத்தை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்காக விலை மனுக்களை கோருவதற்காக 2016 சனவரி 28 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் 08 மாதங்களுக்குப் பின்னர் அதாவது 2016 ஒக்தோபர் 08 ஆந் திகதி உரிய பத்திரிகை விளம்பரம் வெளியிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க கேட்பு மனுக்களை கோரும் போது ஒரு கேட்பு மனு மாத்திரம் கிடைத்திருந்ததுடன் போட்டி விலையினைப் பெற்றுக் கொள்வதற்காக மீண்டும் விலை மனு கோரப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 31,774,152 வருடாந்த வாடகையான இக்கட்டிடம் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 135(2)(இ) இன் பிரகாரம் பிரதம மதிப்பீட்டாளரிடமிருந்து ஒரு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.4 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தலைமை அலுவலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக பத்தரமுல்லை பிரதேசத்தில் 2009 பெப்ரவரி 27 ஆந் திகதி ரூபா 59.3 மில்லியன் செலுத்தி கொள்வனவு செய்யப்பட்ட 75 பேச்சர்ஸ் காணி விளைவற்றுக் காணப்பட்டிருந்தும் அதில் திணைக்கள தலைமை அலுவலகத்தை நிர்மாணிக்காது 13,157 சதுர அடியிலான ஒரு கட்டிடம் அப்பிரதேசத்திலேயே ரூபா 2,647,847 மாதாந்த வாடகையின் கீழ் 03 ஆண்டுகளுக்கு ரூபா 95,322,492 இற்கு குத்தகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் நவம்பர் மாதத்தில் இறப்பர் துறையில் வெளிநாட்டுப் பயிற்சிக்காக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு செயலாளரின் அங்கீகாரமின்றி பங்குபற்றிய இறப்பர் துறையைச் சாராத ஒரு உத்தியோகத்தருக்காக திணைக்களம் ரூபா 493,883 செலவு செய்திருந்தது.

(இ) 2016 ஆம் ஆண்டில் ரூபா 3,503,026 பெறுமதியான 910,000 பொலித்தீன் உறைகளை வழங்குவதற்குரிய பெறுகையின் போது மாதிரிகளுக்கு இணங்க பொலித்தீன் உறைகளில் மீளச் செயற்படுத்தக்கூடிய பொலித்தீன்கள் இடங்கியிருக்கலாகாத போதிலும் கொள்வனவு செய்யப்பட்ட பொலித்தீன் உறைகளின் தரம் சம்பந்தமாக இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தால் உறுதிப்படுத்திய அறிக்கையின் பிரகாரம் மீளச் செயற்படுத்தப்படுகின்ற பொலித்தீன்கள் அடங்கியிருக்கின்றமை அறிக்கையிடப்பட்டிருந்தும் அதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.5 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல் மற்றும் அது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 753.85 | 741.05 | 12.79 | 1.69 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மூலதனம் | 96.00 | 60.05 | 35.95 | 37.44 |
| | மொத்தம் | 849.85 | 801.10 | 48.74 | 5.73 |
| **2014** | மீண்டுவருபவை | 229.30 | 219.54 | 9.75 | 4.25 |
| | மூலதனம் | 869.50 | 852.12 | 17.38 | 1.99 |
| | மொத்தம் | 1,098.80 | 1,071.66 | 27.13 | 2.46 |
| **2015** | மீண்டுவருபவை | 2,589.35 | 2,302.45 | 286.89 | 11.07 |
| | மூலதனம் | 1,102.00 | 892.10 | 209.89 | 19.04 |
| | மொத்தம் | 3,691.35 | 3,194.56 | 496.78 | 13.45 |
| **2016** | மீண்டுவருபவை | 315.29 | 298.86 | 16.43 | 5.21 |
| | மூலதனம் | 1,069.50 | 775.68 | 293.82 | 27.47 |
| | மொத்தம் | 1,384.79 | 1,074.54 | 310.25 | 22.40 |
| **2017** | மீண்டுவருபவை | 325.09 | 317.85 | 7.24 | 2.22 |
| | மூலதனம் | 1,018.00 | 785.82 | 232.18 | 22.80 |
| | மொத்தம் | 1,343.09 | 1,103.67 | 239.42 | 17.82 |

மீளாய்வாண்டின் போது 4 மூலதன செலவு விடயங்களுக்கான ரூபா 990.50 மில்லியன் மொத்த நிதி ஏற்பாட்டில் ரூபா 762.18 மில்லியன் மொத்த நிதி ஏற்பாடு மாத்திரம் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக சேமிப்பு வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 22 சதவீதத்திலிருந்து 49.72 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தது.

## 2.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

திணைக்களத்திற்குரிய 29301 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதியும் கீழே தரப்படுகின்றன.

| **செலவு** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானவை** | **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 19.00 | 18.64 | 14.50 | 16.80 | 55.00 | 37.55 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்திற்குரிய 29301 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்கள ஏடுகளின் பிரகாரம் மீதி ரூபா 39,484,296 ஆக இருந்ததுடன் திறைசேரி ஏடுகளின் பிரகாரம் மீதி ரூபா 37,550,148 ஆக இருந்ததன் காரணமாக திணைக்கள ஏடுகளின் மீதி திறைசேரி ஏடுகளின் மீதியை விட ரூபா 1,934,148 ஆல் அதிகரித்திருந்தது. அந்த வித்தியாசத்தை மீளாய்வாண்டின் போதும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுறுக்களின் பிரகாரம் ரூபா 145,452 நிலுவைக் கடன் மீதி 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வந்ததுடன் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

## 2.7 பொது வைப்புககள்

திணைக்களத்தின் கீழுள்ள 05 பொது வைப்புக் கணக்குகளின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 11.45 மில்லியன் மொத்த தொகையாக இருந்ததுடன் அம்மீதிகளுக்குரிய காலப்பகுப்பாய்வு அறிக்கையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 மனித வளங்கள் முகாமைத்துவம்

### 2.8.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர், மற்றும் ஆளணி ஊதியங்களுக்கான செலவு

திணைக்களத்தின் செயலாற்றலை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரித்த, உள்ளபடியான, மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்படுவதுடன் மீளாய்வாண்டில் திணைக்களத்தால் ஆளணி ஊதிய செலவுத் தொகுதிக்காக ரூபா 229.91 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினா | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 30 | 23 | 07 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 17 | 04 | 13 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 384 | 283 | 101 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 77 | 66 | 11 |
| | **மொத்தம்** | **508** | **376** | **132** |